**On I.G.S.**

பெறுநர்
திரு. ஆர். அதியமான் (எ) சுப்பராவ்,
ஆதி தமிழர் பேரவை,
ஏ-7, சக்தி பிளாட்ஸ்,
மகாவீர் நகர்,
வடவள்ளி,
கோயம்புத்தூர் - 41.

Minister for Adi-Dravidar Welfare
Secretariat, Chennai-600 009

GOVERNMENT OF TAMIL NADU

TRUTH ALONE TRIUMPHS

**ஆ. தமிழரசி,** பி.காம்.,
ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 7.3.2008

அன்புடையீர்,

வணக்கம்.

அருந்ததியர் வகுப்பினர் சமூகப்பொருளாதார நிலையில் அடித்தளத்தில் இருப்பதால், அவர்தம் முன்னேற்றத்திற்கு சிறப்புச் சலுகைகள் அளிப்பது அவசியம் எனக்கருதி, தற்போது ஆதிதிராவிடருக்கு வழங்கப்பட்டு வரும் இடஒதுக்கீட்டில் அருந்ததியருக்கு தனி உள் ஒதுக்கீடு வழங்குவது பற்றி அனைத்து கட்சிகளையும் கலந்தாலோசித்து இந்த அரசு முடிவு செய்யுமென்று 23.1.2008 அன்று ஆளுநர் அவர்கள் படித்த அறிக்கையில் தெரிவித்ததற்கிணங்க,

வரும் 12 ஆம் தேதி, புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் விழுமிய தலைமையில் தலைமைச் செயலகம், அமைச்சரவை அரங்கில் அனைத்துக் கட்சி தலைவர்களின் கூட்டம் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் தாங்களும் கலந்து கொண்டு தங்களின் மேலான கருத்தினைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,

ஆ.தமிழரசி 7/3/08

( ஆ.தமிழரசி )

பெறுநர்

திரு ஆர்.அதியமான் (எ) சுப்பாராவ்,
ஆதிதமிழர் பேரவை,
ஏ–7, சக்தி பிளாட்ஸ்,
மகாவீர் நகர்,
வடவள்ளி, கோயம்புத்தூர்–41.